விபுலானந்தர் கலை இலக்கிய மன்றம்

கவிமுளரி

மாதாந்த மின்னிதழ்

கவிதைகளின் வாசம்

காலிகோள் : 2023

25 பெப்ரவரி 2024

முளரி 2 | இதழ் 2



கவிமுளரி®

மாதாந்த மின்னிதழ்

கவிதைகளின் வாசம்

ISSN 3021-6680

காலக்கோள் : 2023

Kavi Mulari Magazine

புதிய ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

படைப்புகளை அனுப்புவோர் கவனிக்க வேண்டியவை :

- கவிதைகள் மட்டுமே அனுப்பலாம்.
- ஒருங்குறியில் (Unicode font) தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.
- படைப்பாளர் படைப்பின் கீழ் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் முகவரியையும் இட்டு அனுப்ப வேண்டும்.
- ஆக்கம் தனது சொந்தப் படைப்பு என்பதை உறுதிசெய்தல் அவசியம்.
- புகைப்படம் இணைத்து அனுப்பலாம். (நாகரிகமானதாக இருந்தால் மட்டுமே இணைக்கப்படும்)
- ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதிக்குள் ஆக்கங்கள் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
- ஒருவர் எத்தனை ஆக்கங்களும் அனுப்பலாம்.
- ஆக்கங்கள் அடுத்தடுத்த இதழ்களில் பிரசுரிக் கப்படும்.
- மின்னஞ்சலுக்கு அனுப்பப்படும் ஆக்கங்களே இதழுக்கு ஏற்கப்படும்.

....

ஆக்கங்களை அனுப்ப

editor2023kavimulari@gmail.com

படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பாவர். இதழாசிரியர் பொறுப்பல்ல.
ஆக்கங்களைச் செவ்விதாக்கம் செய்வதற்கு ஆசிரியர் குழுவிற்கு உரிமையுண்டு.

**"எழுதுகோல் புரட்சி
எங்ஙனும் எழும்பட்டும்
விழுதென விடுதலை
சமூகத்தில் நிலைக்கட்டும்"**

நற்கவிகளுக்கு
வணக்கம்,

வாழைச்சேனை பேத்தாழையைத் தளமாகக் கொண்டு இயங்கும் விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தின் முயற்சியாகக் 'கவிமுளரி' எனும் கவிதைசார் மின்னிதழ் வெளிவருகிறது.


பிரதேச கவிஞர்களுக்குக் களம் கொடுப்பதும் அவர்களின் எழுத்தாக்க முயற்சிகளுக்குக் கரம் கொடுப்பதும் எமது பிரதான அவா.

அதன்வழியில்,
கன்னி இதழ் வெளிவந்தது. அதற்கு நீங்கள் வழங்கிய ஆதரவிற்கு மேலான நன்றி. தொடர்ந்தும் ஆதரவளிப்பீர்கள் என நம்புகின்றோம்.

இதழில் பங்குபெறும்
கவிஞர்கள் யாவர்க்கும்
வாழ்த்துகள்.

சிலரது கவிதைகள் இடம்பெறாமல் போயிருக்கலாம். அவர்களது கவிதைகள் தொடர்ந்து வரும் இதழ்களில் நிச்சயம் வெளிவரும்.

தொடர்ந்தும் உங்கள்
பேராதரவை வேண்டும்,




உங்கள்,
-இதழாசிரியர்

2024-02-25

கவிமுளரியில் வாசம் வீசும் கவித்தாதுக்கள்

- 👉 மன்னைத் தமிழ்த்தோன்றல்
- 👉 அதீனா அபூ உபைதா
- 👉 தமிழூராள் அனுஷ்திக்கா
- 👉 இரவிகாந்தன்
- 👉 இராகவி சதுஸ்காந்த்
- 👉 அலெக்ஸ் பரந்தாமன்
- 👉 ஓ.சா
- 👉 வாழையூர் அபி
- 👉 க.இரவிச்சந்திரன்
- 👉 ஓறிஸ்
- 👉 இசைப்பிரியன் கபிலன்
- 👉 தமிழ்ப்புதல்வன் க.த.யேசுசகாயம்
- 👉 செல்வம் செல்வகுமார்
- 👉 இரா.வசந்த்
- 👉 இரா.நிதன்
- 👉 பிள்ளைக்கவி பிரசாந்
- 👉 மறத்தமிழன் கலை
- 👉 தமிழ்மகள் சதுர்த்தி



-தமிழ்த்தாய் வாழ்த்து-

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ லனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க விருந்தபெருந் தமிழணங்கே, (௧)

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்குங் கவின்மலையாளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்துசிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே. (௨)

~மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை.

எழுந்துவா தமிழா எழுந்துவா

–மன்னைத் தமிழ்த்தோன்றல்,
தமிழ்நாடு.



நற்றமிழ் இளையவனே
நாற்றிசையும் எழுந்து வா!!
உற்றவள் உயிரென்றே
உணர்வுகூட்டி எழுந்து வா!!

அடிமையர் விலங்கொடிக்க
ஆர்ப்பரித்து எழுந்து வா!
குடிமையும் நமதென்றே
குணகழிக்க எழுந்து வா!!

அன்னையர் நிலம் மீட்க
ஆவலுடன் எழுந்து வா!
மன்னவன் நீயென்றே
மாண்புரைக்க எழுந்து வா!!

மேதகு பெயர்கூறி
மேன்மையுற எழுந்து வா!
ஆதவன் பேரொளியாய்
அடல்காண எழுந்து வா!!

காடையன் கதைமுடிக்க
கரும்புலியாய் எழுந்து வா!
கெடுதலர் பகையறுக்க
குயவரியாய் எழுந்து வா!!

இனம்தனைக் காத்திடவே
இன்றேநீ எழுந்து வா!
சனத்திரள் கூட்டிநின்று
செங்களத்தில் எழுந்து வா!!

விடியலும் உன்கையில்
இடியெனநீ எழுந்து வா!
படிப்பினை அறிந்தவனாய்
பாங்குறவே எழுந்து வா!!

தமிழினம் முதற்குடியே
தரணியிலே எழுந்து வா!
இமிழ்திரை யெனநீயும்
ஈர்ந்திடவே எழுந்து வா!!

அரசியல் நம்முரிமை
ஆண்டிட நீ எழுந்து வா!
இரந்திடல் இழிவென்று
இயம்பிடவே எழுந்து வா!!

திருடரின் வேரறுக்கத்
தீரமொடு எழுந்து வா!
முருகனின் புதல்வனென
மூர்க்கமொடு எழுந்து வா!!

மொழிதனைக் காத்திடவே
மூர்க்கமொடு எழுந்துவா!
இழிகுடி மொழியனைத்தும்
இறக்கிடநீ எழுந்து வா!!

இயற்கையின் வளம் காக்க
இளம்புலியே எழுந்துவா!
தயவொடு உழைப்பவரைத்
தாங்கிடவே எழுந்து வா!!

எழுந்துவா தமிழா எழுந்துவா



உழுகுடி தழைத்தோங்க
ஊடறுக்க எழுந்து வா!
குழுவெலாம் குடிபோற்றும்
குயவரியாய் எழுந்து வா!!

நதியெலாம் பொதுவாக்க
நற்புலியே எழுந்து வா!
விதியென வீழ்ந்திடாது
வினையறுக்க எழுந்து வா!!

மதவெறி ஒழித்திடவே
மானுடனாய் எழுந்து வா!
சுதனவன் உரிமைதனை
சூட்டிடவே எழுந்து வா!!

சாதியப் பெயரழித்து
சான்றோனாய் எழுந்து வா!
மோதிடும் பகைவெல்ல
மூகையென எழுந்து வா!!

வள்ளுவ மறைபோற்றி
வன்புலியே எழுந்து வா!
உள்ளுதல் உயர்வென்னும்
உரிமைபெற எழுந்து வா!!

இராவணத் தமிழ்க்குடிநீ
இறுமாந்து எழுந்து வா!
சிராங்கமும் உயர்த்திநின்று
செருக்களத்தில் எழுந்து வா!!

தமிழினம் தகைமையுறத்
தீவியென எழுந்து வா!!
தமிழிறை முருகனவன்
தாள்தொழநீ எழுந்து வா!

எண்திசைத் திரண்டவராய்
எம்குடியே எழுந்து வா!
பண்ணிசைப் பாடிநிற்கும்
பாவலனாய் எழுந்து வா!!

மடவரல் உயர்த்திடவே
மாட்சியொடு எழுந்து வா!!
தடமெலாம் படைத்திடும்நல்
தாக்கெனவே எழுந்து வா!!


முதியவர் மதிப்புரவே
மதிநிறைத்து எழுந்து வா!!
புதியவர் படைத்திடவே
புயலெனவே எழுந்து வா!!

வேற்றின மொழியறுக்க
வேங்கையென எழுந்துவா!
சாற்றிடும் செம்புலியாய்
செகமெங்கும் எழுந்து வா!!

நற்றமிழ் இளையோனே
நாற்றிசையும் எழுந்து வா!!
பொற்றமிழ் காத்திடவே
புலியெனவே எழுந்து வா!!

மற்றொன்று...

'கவித்தோழி '
-அதீனா அபுஸீ உபைதா,
ஓட்டமாவடி, கிழக்கிலங்கை.



''மற்றொன்று'' என்ற வார்த்தைக்குள்
கரைந்திட்ட கண்ணீர் துளிகளின்
உறுதியான நம்பிக்கை ஒழிந்திருக்கின்றது.

நாட்காட்டியின் பக்கங்கள்
புரட்டப்படும் வேகத்திற்கேற்ப
மனிதர்களின் நடத்தைகளும் புரண்டோடுகின்றன.

உணர்வுடன் ஒன்றிப்போய்
உடலில் ஊறித் துளைத்திட்ட ஓர் அவா
''மற்றொன்று'' என்ற வார்த்தை மூலம்
ஆத்மத் திருப்தி பெற்றுவிடவா போகிறது...?

கிடைக்கவில்லை என்ற வெற்றிடத்தை
''மற்றொன்று'' என்ற வார்த்தையைக் கொண்டு
நிவர்த்தி செய்வதென்பது,
முன்பு ஆசைப்பட்டிருந்தவற்றை
அக்கினியில் அங்கப்பிரதட்சணை செய்வது போலல்லவா?

ஐந்து எழுத்துக்களும்
ஐம்புலன்களை அடக்கி ஆளும் அளவிற்கு
என் ஆசைகள் ஒன்றும் அதிசயங்களல்ல,
அற்புதங்கள் என இதயம் பறையறைகின்றது.

காதல் என்றால் என்ன?

-தமிழூராள் அனுஷ்திக்கா.



காதல்
உடல் தாண்டி
உயிராவது...

காதல்
உணர்வு தூண்டி
உறவாவது...

காதல்
இனமதம் மீறி
இதயமாவது...

காதல்
தேசம் தாண்டி
நேசமாவது...

காதல்
வானம் கிழித்து
மழையாவது...

காதல்
மனம் நிறையும்
சுகமாவது...

காதல்
நான் கடந்து
நாம் ஆவது....

மாறாத வாழ்வு மாறுமா?

-இரவிகாந்தன்,
திருகோணமலை.



அவர்களிடம் மேய்ச்சல்
நிலமில்லை
மேய்ப்பதற்கும் - நல்ல
தலைவன் இல்லை
கன்றுக்கும் வால் இல்லை
அதைப்பற்றி
கதைப்பதற்கும் - இனி
யாரும் இல்லை
உறைக்க பாலும் இல்லை
அவர்களிடம்
உறி கட்ட நூலும் இல்லை

மோரைக் கடைந்தால்
முழு வெண்ணெய்
கிடைக்கும் என்ற
மோகம் இன்று
அவர்களுக்குள்
அங்காங்கே துளிர்க்கிறது.
ஆடை நீக்கிய பால்
அனைவருக்கும்
மிக நல்ல மென்று
அதில் கொள்ளை
அடுத்தவரால் நடக்கிறது.

எங்கிருந்தோ
எருமைக்கு
நிறம் சேர்த்து
பசு நெய் எங்கும்
மிக பரவலாக
புழக்கத்திலே கிடைக்கிறது.
ஆனால் பரிதாபம்
தயிர் உறைக்க
தயிர் போடும்
தத்துவம்தான்
தமிழர் வாழ்வில்
தப்பாகத் தற்போதும்
தொடர்கிறது.

அம்மா



-இராகவி சதுஸ்காந்த்.



ஆயிரம் தெய்வத்தின்
மொத்த சக்தியே!
அன்பெனும் அமுது கொண்ட
ஆதி சக்தியே!

உணவாக உதிரத்தை ஊட்டி
உறங்காத சேயைத் தாலாட்டி
தூங்க வைக்கும் இன்னிசையே!

அழகை நோக்கி ஓடும் உலகில்
பெற்றது அசிங்கமென்றாலும்
அரவணைப்பாய் நீயே!

எத்தனை கோயில்கள்...?
அத்தனையும் உன் பாதம் பணியுமே!
அன்பின் எல்லையற்ற சிகரமே நீதானே

மழலையாய்ப் பேசிய நம்மை
மதுரமொழி பேச வைத்து
மொழியின் வளமையை
சரளமாகக் கற்றுத் தந்தவளே!

காணாத தெய்வங்கள் பல உண்டு
கண்கண்ட தெய்வம் என்றால்
தாய் நீதானே!

வண்டுகளின் ரீங்காரத்தை
ரசிக்க வைத்து
நிலவின் ஒளியில் உணவு ஊட்டி,
பாட்டி வடை சுட்ட கதை
சொல்லிவைத்ததாயே

குளிருக்குப் போர்வையாகி
வெயிலுக்கு இதமுமாகி
கத்தி அழுத நேரமெல்லாம்
கட்டி அணைத்தாயே

சேயாக நாம் செய்த
சேட்டைகள் மறந்து
முத்தத்தில் முழுதும்
மறந்து போனாயே

ஓராயிரம் வரிகளில் கீதம் பாடினும்
உந்தன் சிறப்புக்கு ஈடான
சொல்லேதும் உண்டோ?

புத்தம்புது இலக்கணம் இயற்ற வேண்டும்
உந்தன் அன்பெல்லாம் சொல்லி
ஏற்ற வேண்டும்
என் தாயே!

தெருப்பாடகத் திருடர்கள்

– அலெக்ஸ் பரந்தாமன்,
புதுக்குடியிருப்பு.

என்னிடமிருந்து
இயல்பான வார்த்தைகளை
எதிர்பார்க்கிறாய்.
இனிமையான ஒலியாக
அதைக்கேட்க விரும்புகிறாய்.

வரண்ட நிலத்தில் முளைத்த
நாகதாளிச் செடியாய்
என்வாழ்வு நகர்கையில்...
முட்களைத்தானே
உனக்கு நான்
முகத்துக்கு நேரே தரமுடியும்!

முட்கள் குத்துவது
உனக்கு வேதனையெனில்
என்னில் முட்களை வளர விட்டது
விதியா? - அன்றி
மன ஒவ்வாநிலையின் வெளிப்பாடா?

வாழ்வின் மீதான என் நேசிப்புகளை
"தெருப்பாடகர்கள்" சிலர்
திருடிச்சென்ற பிற்பாடு
இறுகிக் கிடக்கிறது என்மனம்.

உனக்குத் தருவதற்கு
என்னிடத்தில்
இல்லை இப்போது எதுவும்
இயல்பான வார்த்தைகள்.





உயிரின் பாடல்

–ஓ.சா,
களுவன்கேணி, மட்டக்களப்பு.

மேய்ப்பனின் வழிகாட்டலில்
இசையைத் தேடிச்செல்லும்
ஆட்டின் அசைபோடலில்
துளையிடப்படாத மூங்கில் கன்றுகள்
உயிரின் பாடலை இறுதியாக இசைக்கின்றன.

"நெஞ்சமே..நெஞ்சமே..கொஞ்சியே சொல்லுதே
ஆ..ரி..ரோ..".

பின்னணியிற்காக
என் மஞ்சனத்தியின் கூந்தலை யாழாக்கியிருந்தேன்
அவளோ
நன்கு கொழுப்புப்படிந்திருந்த மாட்டிறைச்சித் துண்டை
நெருப்பில் வாட்டலானாள்...

மண் வாசம் வீச்சமெடுக்கிறது..
இசைத்தட்டுக்களே
மெதுவாய் இறக்குங்கள் கூர்வாளை,



அந்தப் பாடல்
எதுவுமற்றுக் கிடக்கும்
என்னில்
ஒருகூடை வண்ணத்துப்பூச்சிகளை
பெய்துவிட்டுப் போவதை
மழை அறிந்திருக்காது
இன்னும் மெதுவாய் உள்ளிறக்குங்கள்....

அவள்

–வளர்கவி
வாழையூர் அபி.



அவள் கண்டியோ ஹட்டனோ
தெரியவில்லை- ஆனாலும்
சத்தியமாகச் சொல்கிறேன் மலையகத்துக்காரியவள்.

பூக்களின் வாசத்தினை
போர்த்திக் கொண்டு- புதுமையவள்
பூங்காற்றாய்ப் பூரிப்பவள்.


உயர்தர கற்கையில்
அவள் என் கனவல்லவா- இன்று
அவளுடன் பல்லாயிரம் நினைவல்லவா.

மங்கையவள் மகாவலியை உடுத்தி
மஞ்சள்நிறப் பூக்களைச் சூடி- காசினியில்
மலைத்துப்போயிருக்கிறாள்.



கல்வியைக் கணிசமாய் ஊட்டும்
கணிகாரிகையவள்- என்
மகா வலிகள் தீர்க்கும் மந்திரவாதியவள்.

மை சிந்தும் கவிவரிகள்
அவளுக்கு அர்ப்பணிக்கிறேன்
அவள்தான் நான் விரும்பும்
பேராதனை பல்கலைக்கழகம்.



கொஞ்சம் வாழ்ந்துகொள்வோம் வாரீர்...!

–க.இரவிச்சந்திரன்,
திருப்பூர், தமிழ்நாடு.

வரவும் செலவும்
வாழ்வும் தாழ்வும்
வாழும் வரையில்
வாழ்வில் இருக்கும்...!

உறவும் பிளவும்
உரிமை பலவும்
உயிருள வரையில்
உடன் பயணிக்கும்...!

அதுவும் இதுவும்
அத்துணை பொருளும்
அடங்கிப் போனால்
அகன்றே போகும்...!

எதுவும் இங்கே
நிரந்தரம் இல்லை
என்பது ஒன்றே
வாழ்வின் எல்லை...!

பஞ்சம் நீளும்
பகைமை சூழும்
பாதையை மாற்ற
பங்கமும் சேரும்...!

நெஞ்சம் கனக்கும்
நேரம் கசக்கும்
நேர்வழி சென்றால்
நேர்த்தியும் பிறக்கும்...!


வந்தோம் வளர்ந்தோம்
செல்வோம் ஒருநாள்
விஞ்சிய வாழ்வை
விழிப்புடன் களிப்போம்...!

வஞ்சகம் விலக்கி
நெஞ்சகம் மகிழ
கொஞ்சம் வாழ்ந்து
கொள்வோம் வாரீர்...!



முடிவில்லா மூன்றெழுத்து...

–ஒறிஸ்,
கிளிநொச்சி



தமிழில் ஆயிரம் பதங்கள்
எல்லாம் ஒருமித்து நிற்பது
காதல் எனும் மூன்றெழுத்தில்
சிற்பி சிலையினைச் செதுக்குகையில்
கொள்வது காதல்
ஆண் பெண் இடையே பகிரிடப்படும்
உறவுப்பாலம் காதல்
தாய் குழந்தை இடையே உள்ள
பாசப் போராட்டம் காதல்
வண்டு தேடி வந்து பூவின்
தேனை அருந்துவது காதல்
இறுதியில் என் கற்பனையை
கவிதையாக மாற்றுவது காதல்
ஏனெனில் காதல் எனும் மூன்றெழுத்திற்கு
முடிவேதும் இல்லையன்றோ......

வாழ்வு தந்த வலி

-இசைப்பிரியன் கபிலன்,
கல்லடி, நாவற்குடா.

உலகம் அள்ளி வீசிய வார்த்தைகள் யாவும்
வலிகளால் வரிகளாக
என் மனதில் விரிகின்றன.

போலி அன்பு போர்த்திய போர்வை
காலம் கடக்கையில்
நழுவத் தொடங்கிற்று.



நினைவுகள் பல கூடிவந்து,
நெஞ்சைப் பிளந்தாலும்
வாழ்வு தந்த வலி
மறக்க இயலவில்லை.

மதியிழந்து மறுத்த வார்த்தைகள்
தனிமையில் வாட்டுகையில்
வாழ்வு தந்த வலி
விதைத்துச் செல்கிறது.

இதுதான் வாழ்வு அல்ல.
இதுவும் வாழ்வு தான் என
புரிந்தால் வாழ்வு தந்த வலியும்
மறையும் அதன்வழியே...

பாரதி

–தமிழ்ப்புதல்வன்
கத.யேசுசகாயம்.



தீர்வொன்று திசையெல்லாம்
திடமாகத் திரும்பிடவே
தீப்பொறியாய்த் திட்டங்கள்
திகைத்திடவே தருவித்தார்!
கூர்போன்ற கண்கொண்டே
குற்றத்தைக் குறைநீக்கி
கூறிடவே குவலயத்தில்
குன்றெனவே கவிதந்தார்!

சீர்மேவும் சிறப்பான
சிந்தனையால் சித்தரென
சீலத்தை சிந்திடவே
சிலகாலம் சிறைப்பட்டார்!
ஊர்கொள்ளும் உவகையினால்
உண்மைபல உலகறியும்
உயிரெனவே தமிழ்மொழியை
உயர்வாக உடன்வளர்த்தார்!

பார்போற்றும் பாரதியை
பாரினிலே பார்ப்போமா?
பாராது நம்வாழ்வு
பரிதாபம் ஆனதுவே!
மார்போடு மனதிருக்கும்
மகிழ்வாகும் கவிதையிலே
மாற்றமிலா மனிதன்தான்
மனதினிலே மகாகவியே!

நீர்மேவும் நிலப்பரப்பில்
நிம்மதியை நிலவவிட்டு
நீர்எங்கே நிறைவாக
நின்றிடுவீர் நிலையாக?
ஏர்பூட்டும் ஏழைகளும்
ஏற்றிடவே வாழ்கின்றீர்
ஏனோதான் எம்நெஞ்சில்
ஏற்றமென்றே உரைத்திடுவீர்!

சொல்ல மறந்த காதல்

-செல்வம் செல்வகுமார்,
தமிழ்நாடு.



சொல்ல மறந்த
காதல் நெஞ்சில்
முள்ளாய் இருந்து
தைக்குது என்னுள்

விழியின் வழியில்
நுழைந்து கொண்டாய்
கழிந்திடும் இரவுகள்
கனக்குது நிதமும்

சேர்ந்திடும் கனவுகளில்
வாழ்கிறேன் நானும்
. சோர்ந்திடும் நெஞ்சில்
. சுமக்கிறேன் உனையே

இமையைப் போலவே
காக்கின்ற நினைவுகள்
இதமாய் தாலாட்டுது
இதயத்தில் என்றும்

தவறிய காதலால்
தடுமாறாமல் வாழ்ந்திட
தவமான வாழ்க்கையும்
தரணியில் நிலைக்குமோ.

காதல் வந்தால்...

-இரா.வசந்த்.
முறக்கோட்டான் சேனை, தேவபுரம்.

இருவிழி அவளது அழகினை, ரசிக்கும்!
இதயமும் அவளை நினைத்தே, துடிக்கும்!
உள்ளத்தில் காதல் தாண்டவம், ஆடும்!
உலகமே உனக்கு அவளாகத் தோன்றும்!



உறக்கம் தொலைத்து இரவுகள் நீளும்!
உறங்கினாலும் , கனவிலும் மீண்டும் காதல்
தொடரும்!

அவளுடன் பேசிடும் போது
நேரம் மெதுவாக நகரும்!
அவள் பேசாத சில நொடிகள்
மனதில் ரணமாக இருக்கும்!

கவிதைகள் தினந்தினம் எழுதிட வைக்கும்!
நம்மை கற்பனை வானில் பறந்திட வைக்கும்!

அவளுக்காக காத்திருக்கும்போது
தனிமை,நரகமாக இருக்கும்!
பக்கத்தில் அவள் வந்தால் நெஞ்சில்
பல ரோஜாக்கள் மலரும்!

காதலியே மனைவியானால், வாழ்வில்
மகிழ்ச்சி என்றும் நிலைத்திருக்கும்!
காதல் கைகூடாமல் போனால்,
காதல் நினைவுகள் நம்மை மெதுவாகக் கொல்லும்!

மன அழுத்தம்...

-இரா.நிதன்,
மட்டக்களப்பு, இலங்கை.



காசின் திசையில் கனபேர்
பாசமென்று இங்கே பலபேர்
வாசம் கொள்ள முடியவில்லை
நாசம் செய்கிறது நம்பிக்கை...

பிறப்பின் பயனை உணராத
பித்தன் போன்று வாழ்ந்தாலும்
சித்தம் தெளிவதில்லை
நித்தம் கடந்து போகிறது மனது...

பித்தம் தலைக்கேறி நாளும்
இரத்தம் வந்த போதும்
சொந்தம் என்று ஒன்று
பந்தமாய் பிணைவதும் இல்லை...

காய்ந்த மனங்களில் நாமோ
காய்க்கும் ஈரத்தைத் தேடி
நோய்க்கு ஆளாகிப் போன
நொடி வாழ்க்கை மறந்துதான் போய்விடுமோ...

மாண்டாலும் இந்த மனவழுத்தம்
மண்ணோடு போகுமோ இல்லை
மண் தின்று மனிதன்
உடலிலே தேங்குமோ...

கண்ணீரைத் தினம் சொரிந்து
கவலையை உண்ட எனக்கு
கைவிலங்கு போடும் ஆயுதமாய்
கைகுலுக்குகிறது மன அழுத்தம்...

இருப்பதை இழக்கச் செய்கிறது
இல்லாததை நினைக்க வைக்கிறது
இன்னும் என்னவோ செய்கிறது
சொல்லத்தான் கண்ணீர் வடிகிறது...

இதயம் நொந்து போவதை
இதமாய் அறிந்தும் கூட
இல்லை என்றாது என்னை
இம்சையாய் தொல்லை செய்கிறது...

வேண்டுகோள் வைத்து எனக்கு
வேதனை தான் மிச்சமென்று
வேண்டினாலும் எனை விட்டு
விலகுவதாய் இல்லை மன அழுத்தம்...

மாற்றத்தை தேடியோடும்
மனிதனே கேட்டுக் கொள்
மாறினாலும் நீ மாறினாலும்
வேண்டாமே மனவழுத்தம்
வேண்டாமே மனதின் அழுத்தம்...

பிரிவுகள்

-பிள்ளைக்கவி பிரசாந்,
கிண்ணையூர்.


பிரிவுகள் மட்டும்
பிரியாமல் போக
பிரியங்கள் தொலைத்து
பித்துக்களாகவே வாழ்கிறோம்

உயிரான உறவுகளை
உடன்பொழுதுகளில் பிரிந்து
நிலையாத வாழ்க்கைதனில்
நிஜமானது ஏதுமின்றி வெறும்
நினைவுகளையே மீதப்படுத்துகிறோம்

கலைந்து போகும் வாழ்க்கைக்கு
கனவுகளை சக்கரங்களாகப் பூட்டி
கணப்பொழுதுகளில் தடம் மாறிவிழ
கண் மறை(ற)ந்து போவதையே
கண்ணீரின் கதை நிரப்புகிறது

போவதும் வருவதுமாய்
யாவரும் உலகினிலே
பயணிகளாய் மாத்திரம்
இருந்து இங்கே தொலைகிறோம்


களிப்பும் கவலையும்
கனதிகளால் ஆன
தடயங்களாய் இங்கே...



நன்நெறி காப்பவன்
தீமையைப் புரிந்து
சுயநல நாயகன்
நன்மையைப் பிரிந்து
புகழையும் நலனையும்
போதையில் மறந்து
மாந்தரின் உயிருடல்
மண்ணையும் சேர்ந்து
ஆடிய ஆட்டங்கள்
யாவுமே அடங்கி
அநாதையாயப் போகையில்
யாவரும் கலங்கி
பிரிவுதான் அவனியின்
பிரியாத தத்துவம்
பிரிவுகள் நிச்சயம்
புரிந்திடு பக்குவம்!

பெண் விடுதலையை எண்ணி

–மறத்தமிழன் கலை,
முறையூர்.



பெண்ணவள் பூமியில் பிறக்கையில்
மேகம் தன் கண்ணீரைச் சிந்தும்
அவளது வாழ்வை எண்ணி!

சிறு வயதினில் தேன் சொட்டும்
அவள் வார்த்தைகள்
யாரும் அறியா காவியமே!

வாழ வந்த வாழ்வு
பல வலிகளை கொண்டதை
அறியாத பெண்ணவள்!

பெண்ணுக்கு உண்டோ? இவ்தரணியில் காவல்!
அது இருந்திட்டால் இல்லாமல் ஒழியும்
பெண்ணின் அவலம்!

ஆசையாய் பேசவும் ஆடவர் உண்டெனில்!
அவளை அழித்திட பேசவும் ஆடவர் உண்டென்பதை
அறியா பெண்ணவள்!

இருமனம் சேர்ந்திட்டால் காவல் எனில்!
அவளை அடக்குண்டு ஆள மானிடரும் உண்டு
இக்கலியுகத்தில்!

காணாத கலியுகத்தில் பலதுண்டு பெண்ணே!
கண் முன்னே காண்பது எல்லாம் மெய் என
எண்ணாதே பெண்ணே! !

பெண் விடுதலையை எண்ணி

பாரதனில் பாவிகள் பலருண்டு.
அதையும் எதிர்த்து கையாளும்
பெண்ணாய் நீ இரு!

பாவையர் நெஞ்சில் தீயாய் எழு!
ஒரு போதும் தனிமையை எண்ணிக்கலங்கி விடாதே!
விழித்தெழுந்து போராடு!

அடக்குண்டு வாழ்ந்த காலம் போய்
இந்த பூமியே ஆளவும் வந்தோம்
எனக் கூறு!

கண் முன்னே தோன்றும் பிரச்சினை
எல்லாம் காகிதமாய் எரித்திடு
பெண்ணே புறப்படு நீ!

பெண் என்றால்
''அடக்கமாய் வாழ்'' என்று சொல்லும்
மானிடர் முன்!
கலைகளால் வையகத்தை ஆள வந்த
பெண் என்று முரசறை!

அடுப்பறையில் உறையும்
சாம்பலாய் இருந்து விடாதே!
ஊரே போற்றும்
உத்தமியாய் இரு...



இரு பயணம்

-தமிழ்மகள் சதுர்த்தி,
வாழைச்சேனை .



விடாத சூரியன்
குறையா வெப்பம்

முடியாத பாதை
கறுக்காத வானம்

அடங்காத தாகம்
அடித்து நொறுக்கும் வாகன நெரிசல்

என் அருகினில்
நினைவில் அகலா ஒரு பயணம்

முடிவு வரையில்
மறவாப் புன்னகையில் சிறு நேரச் சுற்றுலா

சூரியன் பார்த்து திரும்பும் மலர் போல் ஆனேன்..
அன்றையப் பயணத்தில்...





-தமிழ்மொழி வாழ்த்து-

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!

~சுப்பிரமணிய பாரதியார்.

கவிதை
ஆத்ம இணைப்பிற்கு
ஏற்ற ஊடகம்.

-காரிருளன்.



ISSN 3021-6680 Kavi Mulari Magazine

9773021668009

விபுலானந்தர் கலை இலக்கிய மன்றம்
பேத்தாழை